**<u>அ.வ.எண்.350/2022 பி.வா.சா.1 – விஜயகுமார் 05.06.2025</u>**

சாட்சி முன்னிலையாகி, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, வாதி தரப்பில் குறுக்கு விசாரணை

16 ம் பிரதிவாதி நிறுவனத்தில் 2010 ஆம் ஆண்டு முதல் இன்று வரை பணிபுரிந்து வருகிறேன். 16 ம் பிரதிவாதி நிறுவனத்தில் பணிபுரிவதற்கான அடையாள ஆவணம் எதுவும் நாளது தேதி வரை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு சம்மந்தப்பட்ட சங்கதிகள் அனைத்தும் எனக்கு நேரடியாக தெரியும். நான் சர்வே எண்.433/2R என்ற சொத்துக்காக மட்டும்தான் 16 ம் பிரதிவாதி வழக்காடி வருகிறார். அந்த சொத்து தாவா 5 வது அயிட்டச்சொத்தாகும். மற்ற அயிட்ட சொத்துக்களுக்காக நான் வழக்காடவில்லை. 1, 2 பிரதிவாதிகளின் கைரேகையும் மற்றும் கையொப்பங்களை உங்களால் கண்டறிய முடியுமா என்றால் நான் ஆவணங்களை பார்த்தால் மட்டும் தான் கண்ணடறிய முடியும். 1 மற்றும் 2 பிரதிவாதிகளின் கையொப்பம் மற்றும் ரேகையை வைத்து மட்டும் என்னால் யாருடைய கையொப்பம், கைரேகை என்று சொல்ல முடியாது. 03.10.2012 என்பது 1 மற்றும் 2 பிரதிவாதிகள் மற்றும் மற்ற பிரதிவாதிகள் சேர்ந்துதான் விற்கிரைய ஒப்பந்த பத்திரம் வாதிகளிடமிருந்து பணம் பெற்றுக்கொண்டு எழுதிக்கொடுத்துள்ளனர் என்று சொன்னால் அதைப்பற்றி எனக்கு தெரியாது. 16 ம் பிரதிவாதி நிறுவனம் வாதியின் கிரைய ஒப்பந்த பத்திரம் அமுலில் இருந்தபோதே நீங்கள் 1, 2 பிரதிவாதிகளிடமிருந்து கிரையம் பெற்றுள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல, வில்லங்க சான்றிதழில் இந்த கிரைய ஒப்பந்தம் பற்றி எந்த ஒரு குறிப்பும் வரவில்லை. நீங்கள் கூறும் அந்த வில்லங்க சான்றிதழை நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளீர்களா என்றால் கொடுக்கவில்லை. பி.வா.சா.ஆ.2 மற்றும் பி.வா.சா.ஆ.3 ஆவணங்களில் உள்ள

சரத்துக்களுக்கு எதிராக நீங்கள் பிரமாண பத்திரம் தாக்கல் செய்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.2 கிரைய ஒப்பந்த பத்திரம் சரியான மறுபயன் பெற்றுக்கொண்டு பிரதிவாதிகள் பெற்றுக்கொண்டு அந்த கிரைய ஒப்பந்த பத்திரம் ஏற்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. அந்த கிரைய ஒப்பந்த பத்திரத்தில் சாட்சிகள் முறையாக சாட்சி கையொப்பம் செய்துள்ளனர் என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் கிரைய ஒப்பந்த பத்திரம் இருந்தபோதும் நீங்கள் கிரையம் பெற்றுள்ளதால் அது முறையான கிரையமல்ல, அது சட்டப்படி நிலைக்கத்தக்கதும் அல்ல என்று சொன்னால் சரியல்ல. 1 முதல் 15 வரையிலான பிரதிவாதிகள் முன்பணம் பெற்றுக்கொண்டு அதற்கான முன்பணத்தொகையினை வாதிக்கு வட்டி தொகையுடனும் செலுத்த கடமைப்பட்டவர்கள் என்று சொன்னால் சரியல்ல. தாவா 5 வது அயிட்ட சொத்தைப் பொருத்த வகையில் கிரைய ஒப்பந்தம் இருந்த காலத்தில் நீங்கள் கிரையம் செய்ததால் தாவா தொகைக்கு உங்களையும் கட்டுப்படுத்தும் என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ள அனைத்து சங்கதிகளும் பொய்யானது, தவறானது என்று சொன்னால் சரியல்ல. உங்களுக்கு இந்த வழக்கில் 16 ம் பிரதிவாதிக்காக சாட்சியம் அளிக்க சட்டப்படியான அதிகாரம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. 16 ம் பிரதிவாதி இன்றும் கரூரில்தான் உள்ளார் என்று சொன்னால் சரியல்ல, அவர் வெளியூர் சென்றுள்ளார். நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல. தாவாப்படி தீர்ப்பாகவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

ஒம்/. K.H.இளவழகன்
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.